Registered as aNewspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (24-12-65) இதழ் 315

விசுவாவசு மார்கழி 9 ஷஃபான் பிறை 30 வெள்ளிக்கிழமை




## ஜனவரி 1-ல் புது விடுமுறைச் சட்டம்

கொழும்பு, வியா.

புதிய விடுமுறைச்சட்டம் ஜனவரி முதலாம் திகதி அமுலுக்குவரும். 1966-ம் ஆண்டு முதல் போயா தின விடுமுறை, ஜனவரி 6-ம் திகதியாகும். இந்த விபரங்கள் நேற்றிரவு கெஸட்டில் வெளியிடப்பட்டன. வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைக்குப் பதில் போயாதினம் விடுமுறைதினமாக அடுத்த மாதம் அமுலுக்குவருகிறது.

# ஒலிபரப்பு நிலையம்: நிபுணர் குழு சிபார்சு

## வியட்னுமில் 30 மணி நேர சண்டை நிறுத்த உத்தரவு

### கிறிஸ்மஸில் அமுல்நடத்த அமெரிக்கா, தென்வியட்னும் முடிவு

சைகோன், டிச. 23

**கிறிஸ்மஸை முன்னிட்டு வியட்னுமில் 30 மணிநேரம் சண்டையை நிறுத்தும்படி அமெரிக்க, தென் வியட்னும் தளபதிகள் தங்கள் துருப்புக்களுக்கு உத்தரவிட்டிருக்கிருர்கள்.**

தற்காப்பு தவிர வேறு காரணங்களுக்காகச் சுட வேண்டாம் எனவும், ஆயுதங்களை எடுத்துச் செல்லவோ, வேவு பார்க்கவோ வேண்டாம் என்றும் இந்த உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது.

போப்பாண்டவரின் வேண்டுகோளை மதிக்கு முகமாக இந்த உத்தரவை தென்வியட்னும் முப்படைத் தலைவர் விடுத்திருக்கிருர்.

கிறிஸ்மஸை முன்னிட்டு யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் என முதலில் யோசனை கூறியது வியட்காங்கியர் தான் என்பது குறிப்பிடத் தக்கது. இதற்கிடையில் வட வியட்னும்மீது குண்டு வீச்சை நிறுத்தும்படி லண்டனில் 38 பேராசிரியர்களும் மதகுருமார்களும் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வடவியட்னும் உதவிப் பிரதமர் நேற்று மாஸ்கோவில் வியட்னும்பற்றி பேச்சு நடத்தினுர்.

## 'கைதடி, பரந்தனில் இரு அலை நிலையங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணத்தில் வானெலி ஒலிபரப்பு நிலையம் ஒன்று அமைப்பதுபற்றி பூர்வாங்க டரிசீலனை செய்த வானெலி தொழில் நுட்ப, என்ஜினியர் குழு தனது அறிக்கையை, வானெலி விசாரணைக் கமிஷன் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிகிறது.**

யாழ்ப்பாணம் பொது நூல்நிலையக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில்ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை [illegible]ளிக்கும் நிலையம் தற்காலிகமாக அமைக்கப் படலாமென்றும் கைதடியில் ஒலிபரப்பு அலை நிலையம் ஒன்றும் பரந்தனில் மற்றெரு அலை நிலையலை அமைக்கலாமென்றும் இந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கைதடியில் அலைநிலையம் அமைத்தால் யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதும் நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்குமென்றும் மன்னர், வவனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்பதற்கு பரந்தனிலும் ஒரு அலைநிலையம் அமைக்க வேண்டியது அவசியமென்றும் அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப் பட்டிடுப்பதாகத் தெரிகிறது.

---

## லண்டனில் ஜி. ஜி. பொன்னம்பலம்

லண்டன், டிச. 23

ஐக்கியநாடுகள் சபைக்கு, இலங்கை கோஷ்டிக்கு தலைமைதாங்கிய, யாழ்ப்பாணம் எம் பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று முன்தினம் இரவு ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து வந்துசேர்ந்தார்.

நேற்றுமாலை லண்டனிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. மலலசேகராவும், அவரது பாரியாரும் திரு. பொன்னம்பலத்திற்கு ஓர் விருந்தளித்தனர்.

லண்டனிலிருந்து, திரு. பொன்னம்பலம், இலங்கைக்கு இம்மாதம் 28-ம் திகதி புறப்படுவார் என்று தெரிய வருகிறது. பிரிட்டனில் அவர் தங்கும் சில நாட்களில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் ட்பட பல்வேறு நிலையங்களையும் பார்வையிட அவர் திட்டமிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் மழை நீடிக்கிறது

## பலகுடும்பங்கள் வீடிழந்தன; போக்குவரத்து துண்டிப்பு

மட்டக்களப்பு, வியாழன்

**மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதிலும் ஐந்தாவதுநாளாக இன்றும் தொடர்ந்து அடைமழை பெய்தது. இதன்காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் சுமார் 500 குடும்பங்கள் வீடழந்ததாக நம்பப்படுகிறது**

சித்தாண்டி, கல்லாறு, பெரிய கல்லாறு ஆகிய இடங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக பலர் வீடிழந்துள்ளனர். குடியேற்றப் பகுதிகள் பலவற்றிலும் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்துநாட்களாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக போக்குவரத்து இப்பகுதியில் அநேகமாய் துண்டிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் சமூகசேவை இலாகாவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்க அதிபர் பாதிக்கப்பட்ட இடங்களை சென்று பார்வையிட்டார். மட்டக்களப்பு, மூதூர் எம். பி.க்கள் அகதிகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்குமாறு கேட்டுள்ளனர். அகதிகளுக்கு இலவச ரேஷன் வழங்குமாறு எம். பி.க்கள் சமூக சேவைப்பகுதியினரைக் கேட்டுள்ளனர்.

நெல்வயல்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் அணுவல்லரசு?

கராச்சி, டிச. 23

இஸ்லாமாபாத்தில் விஞ்ஞானிகள் அணுவைப் பிளந்ததாகவும், இதன்மூலம் பாகிஸ்தானும் அணு வல்லரசு நாடுகளில் ஒன்ருக ஆகியிருப்பதாயும் பாகிஸ்தான் அணு சக்தி ஏஜென்ஸிகமிஷன் அறிவித்தது.

## "மீண்டும் பரீட்சை இல்லை"

பம்பலப்பிட்டி, வியாழன்

மீண்டும் ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையை நடத்தும் உத்தேசம் எதுவும் இல்லையென பரீட்சைக் கமிஷனர் திரு. எச். எல். விமலசூரியா தெரிவித்துள்ளார்.

ஆங்கில பாட வினுத்தாள்களும் எண் கணித வினுத்தாள்களும்மட்டுமே பரீட்சைக்கு முன்னர் வெளியாயின எனத் தாம் அறிந்துள்ளதாகவும் ஆங்கில பாட பரீட்சை நாளை நடைபெறுமென்றும் எண் கணிதப் பரீட்சை அடுத்த வருடம் ஜனவரியில் நடைபெறுமெனவும் கமிஷனர் மேலும் அறிவித்துள்ளார்.

## இலங்கைக்குப் புதிய பிரி. தூதர்

லண்டன், டிச. 23

நியுயோர்க்கில் பிரிட்டிஷ் கான்ஸல் ஜெனரலாயிருக்கும் திரு. பிரேங்ஸ்டான்லி டொம்லின்ஸ்டன் இலங்கையில் புதிய ஹைகமிஷனராக நியமிக்கப் பட்டிருக்கிருர். 53 வயதான டொம்லின்ஸ்டன் ஜப்பான், சைகோன், தாய்லந்து ஆகிய நாடுகளில் ராஜதந்திர சேவையில்ஈடுபட்டவர் (பி.டி.ஸி.)

## தமிழ்மொழி (விசேஷ) மசோதா

### ஜனவரி 8-ம் திகதி

பம்பலப்பிட்டி, வியாழன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்த வகை செய்யக்கூடியதான புதிய சட்ட விதிகளை தமிழ்மொழி உபயோக (விசேஷ) மசோதாவில் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் அளித்துள்ள மந்திரிசபை இப் புதிய சட்ட விதிகள் யாவும் ஜனவரி 8-ம் திகதி பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதென முடிவு செய்தது.

## போப்பாண்டவர்

திருவனந்தபுரம் டிச. 23

போப்பாண்டவர் போல் விரைவில் ரோமாபுரியில் ஒரு நிரந்தர ஸ்தாபனத்தை நிறுவுவார் என்றும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உதவும்பொருட்டு இந்த ஸ்தாபனம் விரிவான தகவல்களை சேகரிக்குமென்றும் திருவனந்தபுரம் ஆர்ச்பிஷப் வண கிரகோரிஸ் கூறினுர். இந்தயோசனையை முதலில் தெரிவித்தவர் கிரகோரிஸ் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மின்சார நிலையத்துக்கு அருகாமையில் சாரதி லைசென்ஸ் ஒன்றும் அடையாளச் சீட்டு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திரு. சி. கந்தையா என்பவர் இதனை ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் ஈழநாடு காரியாலயத்தில் நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

கொழும்பு, வியாழன்

அரசாங்க நிலத்திற்கு சொந்தங்கொண்டாடுபவர்களை கண்டு பிடிப்பதற்கு நாடுமுழுவதும், அரசாங்க அதிபர்கள் மதிப்பீடுஎடுத்து வருகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எவன் தன்னைத் தாழ்த்துகிறானோ அவன் உயர்த்தப்படுவான். எவன் தன்னை உயர்த்துகிறானோ அவன் தாழ்த்தப்படுவான்.

— யேசுநாதர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 9 உ (24-12-65)

## பல்கலைக்கழக மான்யக் கமிஷன்

இலங்கையில் உயர் கல்விபெறும் பல்கலைக்கழகம் ஒரு பிரச்னையாக உருவெடுத்துள்ளதால் பல்கலைக்கழகங்களை நடத்தும் பொறுப்பைமான்யக் கமிஷன் ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கல்விமந்திரி யோசனை தெரிவித் திருப்பதாகவும் இந்த யோசனையை இதர மந்திரிகளும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும்ஒரு செய்தி கூறுகிறது. இந்த யோசனை கவனமாகப் பரிசீலனை செய்யப்படவேண்டியதாகும்.

இலங்கையில் கல்வி முறையைச் சீர்செய்யும் பொருட்டு வெளிநாடுகள் பலவற்றிலும் சுற்றுப்பிரயாணம் செய்து அந்நாடுகளின் கல்வி முறைகளை ஆராய்ந்து வந்திருக்கிறார் கல்வி மந்திரி.

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் மற்றும் சில காமன்வெல்த் நாடுகளிலும் பல்கலைக்கழக மான்யக்கமிஷன்கள் இயங்குகின்றன. பல்கலைக்கழகங்களின் தேவைகளை ஆராய்ந்து அவற்றுக்கு அரசாங்கம் நிதி வழங்க வேண்டியதுபற்றிசிபார்சு செய்வதுதான் இந்த மான்யக் கமிஷன்களின் பிரதான அலுவலாக இருந்து வருகிறது. பல்கலைக்கழகங்களை நடத்தும் பொறுப்பு மான்யக் கமிஷன்களிடம் இதுவரை எந்த நாட்டிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

பல்கலைக்கழக அமைப்புச் சட்டத்தில் உள்ளபடி பல்கலைக்கழக 'செனட்' சபை, பல்கலைக்கழக மன்றம் ஆகியவைகளின் ஆலோசனையின்மீது உபஅத்தியட்சகரே பல்கலைக்கழகத்தை நடத்தும் நிர்வாகி. காமன்வெல்த் நாடுகள் பலவற்றில் பல்கலைக்கழகச் சட்டம் பல்கலைக்கழகங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கியுள்ளது. இது அமைச்சு மற்றும் வெளியாரின் தலையீடுகளின்றி பல்கலைக்கழகத்தை நடத்த உதவி புரிகிறது. இலங்கைப் பல்கலைக்கழக அமைப்புச் சட்டவிதிகளின்படி பல்கலைக்கழக செனட், அல்லது சபை, அல்லது மன்றம் ஆகியவை தவிர்ந்த வேறு எந்த அமைப்பும் பல்கலைக்கழக நிர்வாகத்தில் பங்கு கொள்ள முடியாது. உத்தேச மான்யக் கமிஷன் அமைத்து அதனிடம் பல்கலைக்கழகங்களின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைப்பதானால் பல்கலைக்கழக அமைப்புச்சட்ட விதிகளையே மாற்ற வேண்டும். மான்யக்கமிஷன் பல்கலைக்கழர்ங்களை நிர்வகித்து நடத்துவதுபுதிய முறை. இதை நன்கு பரிசீலனை செய்து அதன்பின்னரே இறுதி முடிவு செய்யப்பட வேண்டும். இலங்கையிலுள்ள கல்விமான்களின் ஆலோசனைகளையும் பெறுவது நல்லது.

## பட்டமளிப்பு விழா ஆர்ப்பாட்டம்

வித்தியோதய பல்கலைக்கழக பட்டமளிப்புவிழாவில், பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் நடந்துகொண்ட முறையைப் பலரும் காரசாரமாகக் கண்டித்திருக்கின்றனர். பட்டமளிப்புவிழாவில்பிரதமஅதிதியாக கலந்துகொண்டகல்விமந்திரியையும், மற்றையோரையும் மாணவர்கள் கூச்சலும் கிண்டலும்செய்து 'அவமரியாதை' செய்தனரென்றும் உயர்தரக்கல்வி பெறும் எமது எதிர்காலப்பிரஜைகள் இவ்விதம் நடந்து கொள்ளலாமா என்றும் பலர் கேட்கிறார்கள். பல்கலைக்கழகத்தில் 'காடைத்தனத்தை ஒழித்துக்கட்டத் தாம் விரைவில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கல்விமந்திரியும் தெரிவித்திருக்கிறார். பல்கலைக்கழகக் கல்விக்காக லட்சக்கணக்கான பணம் வீண்செலவாகிறது என்றும் கல்விமந்திரி கவலையுடன் கூறுகிறார்.

பட்டமளிப்பு விழாக்களில் மட்டுமல்ல பல்கலைக்கழக வைபவங்களிலும் மட்டுமல்ல இதர பொது வைபவங்களிலும் கூச்சலும், கிண்டலும் செய்வது சாதாரண விஷயமாகிவிட்டது. இது ஒரு நாகரிகமாகவும் ஆகியுள்ளது. சிலகாலத்துக்கு முன் கொழும்பில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கவர்னர் ஜெனரல் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோது அவருக்கும் கூச்சலும் கிண்டலும்செய்யப்பட்டது.

இவ்வித செயல்களுக்கு மாணவர்களை மட்டும் குற்றம் சொல்லிவிடமுடியாது. அரசியல்வாதிகளும், அரசியலில் ஊறிய ஆசிரியர்களுமே மாணவர்களின் இந்தப் பழக்கத்துக்குக் காரணமாவார்கள். பல்கலைக்கழகக் கல்விக்கு லட்சக்கணக்கான பணம் வீணாகச் செலவிடப்படுவதாகக் கல்விமந்திரி கூறுகிறார். மாணவர்களுக்கு தகுந்த வசதிகள் இல்லாது பல்கலைக்கழகப் படிப்புக்குப் பணம் செலவழிப்பதால் மாணவர் திருப்தியடைந்துவிடமுடியுமா? வசதிகளும், ஆசிரியர்கள் மற்றும் நாட்டின் தலைவர்கள் ஒழுக்கத்துக்கு வழிகாட்டுவதன் மூலமே மாணவர்கள் திருப்தியுடனும், ஒழுக்கம் கட்டுப்பாடு ஆகியவைகளுடனும் வளரமுடியும்.

### மக்கள் சபை

சுழிபுரம், வியாழன்

சங்கானை கோவில்பற்று மக்கள் சபைத் தலைவராக சுழிபுரம் கிராமசபைத் தலைவர் சு. கந்தசுவாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன் செயலாளராக சங்கானை கிழக்கு கிராமசேவையாளர் கடமையாற்றுவார். முதலாவது நிர்வாகசபைக் கூட்டம் கடந்த வாரம் சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்றது.



## ஆசிரியருக்கு கடிதங்கள்

### மாற்றத்தை ஏற்கட்டும்

தொழிற்சங்கங்கள் தங்களுடைய நலஉரிமைகளைப் பாதுகாப்பதோடு சமூக, நாட்டு முன்னேற்றத்துக்கும் துணைபுரிவதாய் அமைதல் வேண்டும். ஆசிரியரைப் பொறுத்தவரையில் எத்தனையோ சங்கங்கள் காளான்போல் முளைத்துவிடுகின்றன. தன்னலத்தையே குறிக்கோளாக் கொண்டு அகில இலங்கை என்ற பெயரில் முக்கியமாக வடக்கில் மாத்திரம் இயங்கும் ஒருசங்கம் காலத்துக்குக்காலம் நொண்டிச் சாக்குகளை முன்வைத்து பார்லிமெண்ட் உறுப்பினர்களின் துணையுடன் மாற்றத்தை நிறுத்திவிடுகின்றது. மாற்றம் எல்லா அரசினர் ஊழியருக்கும் பொதுவானதே. 1-1-66ல் நடைபெறும் மாற்றத்துக்கும் சில நொண்டிச் சாக்குகளை முன்வைத்து மாற்றத்தை ரத்துச் செய்ய அது முனைகிறது.

வடபகுதிக் கல்வி பாதிக்கும் என்பது ஒன்று. தங்களுடைய வருமானமும் வாழ்க்கை வசதியும் பாதிக்கும்என்பதைத்தான், கல்வி பாதிக்கும் என்று சொல்லுகிறார்கள்போலும். வெளிமாகாண ஆசிரியர்கள் தரங்குறைந்தவர்களா? அல்லது கெட்டித்தனமான ஆசிரியர்களின் சேவையை வெளிமாகாணப் பிள்ளைகளும் பெறப்படாது என்று கருதுகிறார்களா?

உரிமைகள் கிடைக்கவில்லையென்பது இன்றொன்று பெரும்பாலான உரிமைகள் கிடைத்துவிட்டன. கிடைக்காத உரிமைகள் பெற ஏனைய சங்கங்களுடன் இணைந்து வாதாடிப் பெற முடியும். கடமையைச் செய்து உரிமையைப் பெறுவதே சிறந்த வழியாகும்.

மற்றையது மூப்பு அட்டவணை. அரசினர் பொறுப்பேற்று 4 வருடங்களாகியும் மூப்பு அட்டவணை தயாரிக்க ஆவன செய்யாதது அவர்கள் குற்றமா? மாறிய பின்பும் பெரும்பாலான ஆசிரியர்கள் பொதுவான மூப்பு அட்டவணை தயாரிக்க ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன். குறைகள் நீங்கவும் வெளிமாகாண ஆசிரியர்களின் துன்பம் நீங்கவும் மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்களாக!

சி. சங்கரப்பிள்ளை,
மீசாலை வடக்கு.

### கல்விமந்திரிக்கு நன்றி

வெளிமாகாணங்களில் உள்ள பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நிலவிவரும் ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்கும்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலதிகமாகவிருக்கும் ஆசிரியர்களை அவ்விடங்களுக்கு மாற்றி வெளிமாகாணத் தமிழ்ப் பிள்ளைகள் தாய்மொழிக் கல்வியைக் கற்க வசதி செய்தமைக்காக தேசிய அரசாங்கத்துக்கும் கல்விமந்திரிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

1-1-66ல் மாறிச்செல்லவிருக்கும் ஆசிரியர்களின் இடமாற்ற உத்தரவுகள் எவ்விதத்திலும் நிராகரிக்கப்படாமல் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆண்டுதோறும் இவ்விதமான இடமாற்றங்கள் தொடர்ந்து நடைபெற ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

மா. கந்தப்பு,
காரியதரிசி.
அகில இலங்கைதமிழாசிரிய ஐக்கிய முன்னேற்றச் சங்க பதுளைக் கிளை.

## கரவைஓவியருக்கு பிரிட்டிஷ் அதிகாரி பாராட்டு

உடுப்பிட்டி, வியாழன்

''கலைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்பை உயர்த்துவதில் முக்கிய பங்கை வகிப்பவர்கள். கலை ஒருவகை மருந்து. அதை நுகர்ந்து அநேகர் தமது கவலை என்ற நோயைப் போக்குகிறார்கள். ஓவியக்கலைஞர் ஒருவரை கௌரவிப்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். எங்கள் நாட்டு மக்களும் கலையையும் கலைஞர்களையும் பெரிதும் விரும்புவார்கள். ஓவிய ஆசிரியர் திரு. த. வேலுப்பிள்ளை தமது சுய உணர்ச்சிகளுடன் மனதைத் தொடும்படியாக வரைந்துள்ள படங்கள் எனக்கு மிகவும் பிடித்துள்ளன. மேல் நாட்டுப் பாணியிலும் அவர் சில ஓவியங்களை வரைந்துள்ளார். அவரது சிறந்த ஓவியங்களை எனது பிரிட்டிஷ் மக்களும் பார்த்து ரசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். பிரிட்டனிலுள்ள ஓவியச்சாலைகளுள் ஒன்றில் அவரது ஓவியங்களைக் காட்சிக்கு வைப்பதற்கு முயற்சி செய்கிறேன். கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டால் தான் உண்மைக் கலை வளரும். இலங்கையிலுள்ள ஓவியர் ஒருவரைப் பெருமைப்படுத்துமு விழாவில் பங்கு கொண்டதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் பிரதிநிதி திரு. ஆர். கே. பிருடி நெல்லியடி [illegible] ஓவியக் கலைஞர் கரவை வேலனின் (தா. வேலுப்பிள்ளை) ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

சமூக சேவையாளர் திரு. கே. ரி. இராசசிங்கம் பேசுகையில் ''கலைஞர்கள் இந்நாட்களில் மதிக்கப்படுவதில்லை. அதுவும் ஈழத்திலே கலைஞர்கள் கலைஞர்களாக மதிக்கப்படுவதில்லை'' என்றார்.

வாணிகலைக்கழக இயக்குநர் பண்டிதர் க. வீரகத்தி பேசுகையில் ''சங்க காலத்தில் ஓவியத்திற்கு நம் தமிழ் நாட்டில் இருந்த மதிப்பு இன்று இல்லை'' என்றார்.

திருவாளர்கள் வ. சிவராசன், கவிஞர் இ. நாகராஜன் ஆகியோரும் பேசினர்.

ஓவியர் திரு. த. வேலுப்பிள்ளை (கரவை வேலன்)க்கு திரு. ஆர். கே. பிருடி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

கரவை வேலன் பேசுகையில், ''எனது மனதில் உள்ள எண்ணங்களையே சித்திரமாகவரைந்தேன். எனது உணர்ச்சிகள் தான் கலை. கலை கலைக்காகவே செய்யப்பட வேண்டும்'' என்றார்.

கீதாஞ்சலி நல்லையாவின் கலாசேத்திர நடனக் குழுவின் மயில் நடனம், பரத நாட்டியம், அபிநயனம் முதலியன நடைபெற்றன. இளைப்பாறிய தலைமை உபாத்தியாயர் திரு. கே. கந்தப்பு இவ் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

## ஊரைச் சுற்றி

''ஆலயங்கள்மட்டும் திறந்தால் போதாது, இதயங்களும் திறக்கவேண்டும். அப்போதுதான் சமூக ஏற்றத்தாழ்வு ஒழியும்''- பஸ்ஸில் இடமில்லாமல் டாக்ஸியில் பறந்துசென்ற என் காதில் இப்படி ஒரு பொன்மொழி கேட்டது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் மகாநாட்டறை திறந்திருந்ததால் இந்த வார்த்தைகள் வெகு தெளிவாகக் கேட்டது. கேட்காதிருந்தவர்களுக்கும் கேட்கட்டுமே என்றுதான் ஏதோ கேட்டதைச் சொல்கிறேன்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் மகாநாட்டறையில் சென்ற புதன்கிழமை சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்புக் குழுவின் மகாநாடு நடைபெற்றபோது அங்கு சமூகமளித்திருந்த பலர் தத்தமது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். காரியாதிகாரிகள் பலர் இதுசம்பந்தமாக தாம் செய்துவரும் காரியங்களை வெளிப்படுத்தினார்கள். அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் சில, ஏற்றத் தாழ்வை ஒழித்துச் சமூகத்தில் சமமானநிலையை உருவாக்க உதவும்போல் தெரிந்தது.

''பொதுக் கிணறுகள் பல கட்டினால் எல்லோரும் அதை உபயோகிக்கவேண்டிய சந்தர்ப்பமேற்படும்போது ஏற்றத் தாழ்வு ஒழிந்துவிடும்'' - இது ஒருவர் கருத்து. குடியேற்றத் திட்டத்தில் தாழ்த்தப்பட்டுள்ளவர்களுக்குப் போதிய இடமளிக்கப்படவேண்டும் என்பது மற்றொருவர் கருத்து. தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையேயுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி வசதி மேலும் அளிக்கப்பட்டு அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டுமெனவும் அபிப்பிராயம் வெளியிடப்பட்டது.

கல்லூரி மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு அகற்றப்படுவதற்கான தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், அவர்கள் மனத்தில் சமத்துவ எண்ணத்தைப் பதிய வைத்தால் எதிர்கால சந்ததியினர் ஏற்றத்தாழ்வு காணாது வாழ்வார்கள். இதற்காக இதுபற்றிய கருத்தரங்கங்கள் கல்லூரிகளில் நடத்தப்படவேண்டுமென கல்வித்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இதையெல்லாம் கேட்ட அரசாங்க அதிபர் தமது யோசனைகளையும் தெரிவித்தார். இப்போது இந்த ஏற்றத்தாழ்வு ஒழிந்துவருவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். காலம் விரைவில் மாறும் என்பதில் மகாநாட்டில் இருந்தவர்கள் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்ததுபோல் நாமும் நம்பிக்கை கொள்ள போதிய இடமுண்டு.

-குருவி

### பாராட்டு

பருத்தித்துறை, வியா.

கொழும்பு முனிசிபல் சபைத்தேர்தலில் ஐ. தே. கட்சி பெற்றுள்ள வெற்றியைப் பாராட்டி வடமராட்சி ஐ. தே. கட்சிக் கிளை பாராட்டுச் செய்தி ஒன்றை, கட்சித் தலைவரும் தேசிய அரசாகங்கத்தின் பிரதமருமான திரு. டட்லி சேனநாயக்காவுக்குஅனுப்பி வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னுமில் அமைதி ஏற்படுத்த போப்பாண்டவர் நேரடி முயற்சி

## சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள தூதர்களுக்கு அறிவிப்பு?

வத்திக்கான், டிச. 23

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்தும் விஷயமாக போப்பாண்டவர் புதிய நேரடி முயற்சி எடுத்து வருகிருர் என வத்திக்கான் வட்டாரங்கள் கூறுகின்றன.

வியட்னும் உட்பட உலகெங்குமுள்ள வத்திக்கானின் ராஜியத் தூதர்கள் இவ்விஷயமாகத் தொடர்பு கொள்ளுமாறு பணிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதே சமயம் போர்நிறுத்தத்துக்கும், பின் பேச்சுவார்த்தைக்கும் செவிசாய்க்குமாறு யுதாண்ட் கேட்டிருக்கிருர்.

கிறிஸ்மஸை முன்னிட்டு குறுகிய கால போர்நிறுத்தம் சம்பந்தமான வியட்காங் யோசனையை அமெரிக்கா, தென்வியட்னும் அதிகாரிகள் பரிசீலித்து வருகிருர்கள்.

வியட்காங்கியர் முன்பு 12 மணி நேர சண்டை நிறுத்தம் பற்றி கேட்டிருந்தபோது, அதை வெறும் பிரசாரம் என அமெரிக்கா ஒதுக்கித் தள்ளியதாயும், ஆனல் போப்பாண்டவரின் அறிக்கையைத் தொடர்ந்து அமெரிக்கா இவ்விஷயத்தில் தனது கருத்துக்களை மாற்றிக்கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

எனினும் இவ்விஷயமாக முடிவு செய்யும் பொறுப்பு ஸ்தல அதிகாரிகளைத் தொடர்ந்தது என அமெரிக்கா கூறியிருக்கிறது.

# இந்திய உணவுமந்திரி நம்பிக்கையுடன் திரும்புகிருர்

## உணவு நெருக்கடியை சமாளிக்க உறுதி

வாஷிங்டன், டிச. 23

இந்தியாவுக்கு அளிக்கப்படும் அவசரகால உணவுப் பொருள் உதவி, போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என ஜனதிபதி ஜோன்ஸன் தம்மிடம் கூறியதாக திரு. சுப்ரமண்யம் இங்கு நிருபர்கள் மகாநாட்டில் கூறினர்.

பகைவருக்கெதிரான போரைவிட பஞ்சத்திற்கெதிரான போரே முக்கியம் என அவர் கூறியதாயும் தாம் மிகுந்த நம்பிக்கையுடன் நாடு திரும்புவதாயும் திரு. சுப்ரமண்யம் கூறினர்,

அமெரிக்க உதவியுடன் நீண்டகால விவசாய அபிவிருத்தித் திட்டம் இந்தியாவில் மேற்கொள்ளவிருப்பதாயும், பல தேச முயற்சி இதற்குத் தேவை என்றும் மேலும் அவர் கூறினர்.

கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் அணுகப்பட்டிருக்கின்றன. ரசாயன உரம், கப்பல் உதவி ஆகியவற்றில் பிரிட்டன், ஜப்பான், ஸ்காண்டிநேவிய நாடுகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் சுப்ரமண்யம் கூறினர்.

# பிறநாட்டு விவகாரத்தில் தலையீடு கூடாது

## ஐ. நா. பிரகடனம்

ஐ. நா. டிச. 23

ஒருநாடு, மற்ருேர் நாட்டின் விவகாரத்தில் தலையிடுவதை ஐ. நா. பொதுச்சபை கண்டித்திருக்கிறது.

கடந்த 3 மாதங்களில் செய்யப்பட்ட பெரிய முடிவுகளில் இந்தப் பிரகடனமும் ஒன்று என சில ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டனர்.

''ஒருநாடு மற்ருேர் நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு விஷயத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக எக்காரணத்தைக் கொண்டும் தலையிட உரிமை இல்லை.

ஆயுதத் தலையீடு, அல்லது ஒருநாட்டுப் பிரமுகர்கள் மீது திட்டமிட்ட பயமுறுத்தல், அல்லது ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார, கலாசார சக்திகளை திட்டமிட்டுப் பயமுறுத்தல் ஆகியன கண்டிக்கத்தக்கன. இன்னெரு நாட்டு அரசாங்கத்தைக் கவிழ்க்க அல்லது அதன் நாட்டுப் பூசலில் தலையிட ஏற்பாடு செய்தல், உதவுதல், நிதியளித்தல், தூண்டுதல், பயங்கர ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் விலக்கப்பட வேண்டும்.

பொதுச்சபையின் இந்தப் பிரகடனத்தை 109 நாடுகள் ஆதரித்தன. எவரும் எதிர்க்கவில்லை. பிரிட்டன் வாக்களிப்பில் பங்குகொள்ளவில்லை. (பி.டி.ஸி.)

## சாஸ்திரி

ரங்கூன், டிச. 23

பர்மியத் தலைவர் நீவினுடன் 3 நாள் பேச்சுக்களை முடித்துக்கொண்டு திரு. சாஸ்திரி இன்றுகாலை தாயகம் புறப்பட்டார்.

இருவரும் நட்புமுறையில் மனம் விட்டுப் பேசியதாயும், பரஸ்பரம் கருத்துக்களைப் புரிந்து கொண்டதாயும் அவர் கூறினர்.

இரு நாடுகளின் சிந்தனை, வழிமுறைகள் ஆகியன ஒரே மாதிரியாக இருந்ததெனக் கூறிய சாஸ்திரி, இரு நாடுகளும் மண்டலசார் பற்ற கொள்கையைப்பின்பற்றுகின்றன என்றும்குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக ஒப்பந்தம் நீடிக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

## விமானத்தை சுட்டனர்

கான்பரா, டிச. 23

லண்டனுக்குச் சென்ற போயிங் பிரயாணிகள் விமானம்ஒன்று சிங்கப்பூரை அணுகியபோது இந்தோனேஷியத் துருப்புக்கள் அதைச் சுட்டதாக ஆஸ்திரேலிய விமான இலாகா பேச்சாளர் ஒருவர் கூறினர். (பி.டி.ஸி.)

## மலைச்சரிவு: 120பேர் பலி

பெரு, டிச. 23

பெருவில் மலைச்சரிவு ஏற்பட்டதன் காரணமாக 120 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

## "தொடர்ந்து சண்டையிடுவோம்"

ஹாங்காங், டிச. 23

அமெரிக்கத் துருப்புக்கள் தென்வியட்னுமில் இருக்கும் வரை வியட்காங்கியர் தொடர்ந்து சண்டையிடுவார்களென வியட்காங் அரசியல் பிரிவுத் தலைவர் கூறியதாக, நவசீன செய்திஸ்தாபனம் அறிவித்தது. (பி.டி.ஸி.)

## சுவர்ண்சிங் மாஸ்கோவிஜயம்

புதுடில்லி, டிச. 23

இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் இன்று மாஸ்கோ சென்று, இரண்டு அல்லது மூன்று தினங்கள் அங்கு தங்குவார் என அறிவிக்கப்பட்டது.

தமது விஜயம் டாஷ்கண்ட் பேச்சுடன் சம்பந்தப்பட்டதல்ல வென்றும், ஆனல் இதுபற்றிசில பூர்வாங்கங்களை தாம் விவாதிக்கக் கூடுமென்றும் அவர் கூறினர்.

## "பாக்.கொள்கை புகாருக்குரியது"

வாஷிங்டன், டிச. 22

பாகிஸ்தானின் கொள்கை பற்றி புகார் செய்ய உறுதியான காரணங்கள் இருப்பதாக 'வாஷிங்டன்போஸ்ட்' பத்திரிகை கூறியிருக்கிறது. சீனவுடன் அது இரகசியமாகக் கூட்டுச் சேர்ந்திருக்கலாமென்றும். பாகிஸ்தான் சீனவுக்கு விமானத்தளம் அமைத்துக்கொடுக்க உதவி செய்யாமல் ஆபிரிக்காவில் சீன சதிவேலை நடத்த வாய்ப்பிருந்திருக்காது என்றும் மேலும் அது கூறுகிறது.

## ஏடனில் வேலைநிறுத்தம்

ஏடன், டிச.33

அதிகச்சம்பளம் கோரி 10,000 ஊழியர்கள் இங்கு வேலை நிறுத்தம் செய்திருக்கிருர்கள்.

## ஸாம்பியா தூதுகோஷ்டிகள்

லண்டன், டிச. 23

ஸம்பியா மந்திரிகள் தூதுகோஷ்டி ஒன்று இங்கிருந்து மாஸ்கோவுக்கு புறப்பட்டிருக்கிறது. மற்ருேர் தூதுகோஷ்டி வாஷிங்டனுக்குப் புறப்பட்டிருக்கிறது.

ரொடீஷியாவுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென இத்தூதுகோஷ்டிகள் லண்டனில் வற்புறுத்தின.

## அரேபியா பலநாடாகும்

லண்டன், டிச. 23

அமெரிக்காவும், பிரிட்டனும் சவூதி அரேபியாவை பூரண வானப்பாதுகாப்பு பிராந்தியமாக்க முயற்சிகளை மேற் கொண்டிருக்கின்றன. 45 கோடி டாலர் செலவில் சண்டை விமானங்களும், ராக்கெட்டுகளும் [illegible] அந்தநாட்டுக்கு வழங்கப்படும். (பி.டி.ஸி.)

## 'கிளிப்பு'களின் உபயோகம்

பான். டிச. 23

கடிதங்களை இணைக்க மட்டுமே 'கிளிப்' உதவுகிறது என்று நீங்கள் நினைத்தால் அது தவறு உற்பத்தியாகும் 'பேப்பர் கிளிப்'புகளில் ஐந்தில் ஒரு பகுதிதான், 'பேப்பர் கிளிப்'புகளாகப் பயன்படுகிறது. மற்றவை வேறு பல காரியாலங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சமீபத்தில் இது குறித்து மேற்குஜெர்மன் புள்ளிவிபர நிபுணர்கள் 'ஆராய்ச்சி' நடத்தினர்கள்.

ஒரு லட்சம் 'பேப்பர் கிளிப்'புகளில் 19,000க்கும் அதிகமானவை, அலுவலகங்களில் 'சீட்டுக் கச்சேரி' களின் போது, பணத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டு, மறைந்தன. சுமார் 16,000 கிளிப்புகள், தட்டெழுத்து இயந்திரங்களைச் சுத்தம் செய்ய பயன்படுத்தப்பட்டன. 5,000 கிளிப்புகள் நகங்களைச்சுத்தம் செய்தன. டெலிபோனில் பேசும்போது 'துருதுரு' என்று இருக்கும் கைகள் வளைத்துப்போட்ட கிளிப்புகள் 14,000. கன்னியர்களின் சாலுறைகளைக்கவ்விப் பிடிக்கப் பயன்பட்ட கிளிப்புகளின் எண்ணிக்கை 7,000. சாப்பிட்ட பின்னர் பல்குத்த 5,000 கிளிப்புகள் பயன்பட்டன. புகைக்குழாய்களைச் சுத்தம் செய்ய 3,230 கிளிப்புகளும், 'ஸ்குரூட்டிரைவர்'களாக 2481 கிளிப்புகளும் பயன்படுத்தப்பட்டன. சுமார் 7,000 கிளிப்புகள் தரையில் விழுந்து, எதற்கும் பயனின்றி குப்பையில் சேர்ந்தன. எனவே ஒரு லட்சம் கிளிப்புகளில் சுமார் 20,000 கிளிப்புகளே எதற்காகத் தயாரிக்கப்பட்டனவோ அதற்காக காகிதங்களை இணைக்கப் பயன்படுத்தப்பட்டன. (யூ.பி. எஸ்.)

## சியாங்கின் ஆலோசகர்

தைப்பே. டிச. 23

சீனக் குடியரசின் தந்தையான சன்யாட் ஸன்னின் புதல்வர் டாக்டர் சன்போவை தனதுசிரேஷ்ட ஆலோசகராக, தேசிய சீனத்தலைவர்சியாங்கைஷேக் நியமித்திருக்கிருர்.

சென்ற மார்ச் மாதம் இப்பதவியிலிருந்த உபஜனதிபதி சென்செவ் இறந்ததால் இப்பதவி காலியாகக் கிடந்தது.

டாக்டர் சன் 16 ஆண்டுகள் அமெரிக்காவிலிருந்தபின் சென்ற அக்டோபர் மாதம் தாய்வான் வந்தார். அவருக்கு வயது 75. (பி. டி. ஸி.)

## வேவு பயிற்சி

புதுடில்லி, டிச. 23

இந்தியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட ஊடுருவல்காரர்களுக்கு சதிவேலை, வேவு, கொரில்லாப்பயிற்சி ஆகியவற்றை பாகிஸ்தான் அளித்து வருகிறது.

## வேலையில்லாதவர் மனைவிக்கு...

டூரின், இத்தாலி டிச. 23

மனைவியின் தலையைச் சிரைத்ததற்காக கிலியானே ஜெண்டைல் என்பவருக்கு 10 மாத சிறை வாசம் கிடைத்தது. தான் வேலையில்லாமல் கஷ்டப்படும் போது, மனைவி ஷில்லிங் கொடுத்து தலையை அலங்கரித்துக் கொள்வதாக அவர் குற்றம் சாட்டினர்.

''அவருக்கு நான் ஒரு பாடம் படித்துக் கொடுக்க வேண்டும். அது என்றும் நினைவில் இருக்கும்'' என்ருர் அவர். (பி. டி. ஸி.)

## ஆயுத உற்பத்தியில் தன்னிறைவு

ஹைதராபாத், டிச. 23

ஆயுதங்கள், தோட்டாக்கள் ஆகியவற்ன் உற்பத்தியில் இந்திய, அனேகமாக தன்னிறைவு பெற்று விட்டதென்றும், அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டது நல்ல பலனை அளித்துள்ளதென்றும் மந்திரி ரகுராமையா கூறினர். இதனல் 21 கோடி ரூபாய் வெளிச்செலாவணி மிச்சப்பட்டிருப்பதாயும் அவர் கூறினர்.

## காஷ்மீரில் பாக். கிடங்கு

ஸ்ரீநகர், டிச. 22

சைபிர்கர், ஸ்டென் துப்பாக்கிகள், எறிகுண்டுகள், இதர ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொண்ட பாகிஸ்தானிய கிடங்கு ஒன்றை பொலிசார் நேற்றுக் கண்டனர். இந்த ஆயுதங்களில் பாகிஸ்தானிய அடையாளங்கள் இருந்தன.

## தப்ப உதவி தண்டனை பெற்றனர்

மேற்கு பெர்லின், டிச. 23

கிழக்குஜெர்மனியிலிருந்து மேற்கு பெர்லினுக்கு ஒருவர் தப்பிச் செல்ல உதவியளித்ததற்காக இரு அமெரிக்க நீக்ரோக்களுக்கு தலா 8 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. (பி. டி. ஸி.)

## ஆப்கானிஸ்தான்

ஐ. நா. டிச. 23

காலனி சம்பந்தமான பொதுச் சபையின் விசேஷ கமிட்டியிலிருந்து கம்போடியா ராஜினமா செய்துவிட்டதால், அந்த ஸ்தானத்திற்கு ஆப்கானிஸ்தானம் நியமிக்கப்பட்டிருக்கிறது. (பி. டி. ஸி.)

## வழக்கறிஞர் பிடிபட்டார்

ஜோகானிஸ்பர்க், டிச. 23

வழக்கறிஞரான ஆப்ரஹாம் பிஷர் கியூ. ஸி. இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். 5000 பவுன் பிணையில் சென்ற இவர் தப்பியோடிய பின் பிடிபட்டார். சட்ட விரோத கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகிப்பதாக இவாமீது குற்றஞ் சாட்டப்பட்டது. (பி. டி. ஸி.)

## பார்லிமெண்ட் அங்கீகாரம்

லண்டன், டிச. 23

ரொடீஷியாவுக்கு எண்ணெ சப்ளையைத் தடைசெய்ய பிரிட்டிஷ் பார்லிமெண்டும், பிரபுக்கள் சபையும் அங்கீகாரம் அளித்திருக்கின்றன.

## கட்ச் நீதிமன்றம்: சுவீடிஷ் நீதிபதி

புதுடில்லி, டிச. 23

சுவீடிஷ் சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதியான திரு. கன்னர்லேகர் கிரென் என்பவரை கட்ச் நீதிமன்றத் தலைவராக ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் நியமித்திருக்கிருர்.

## யாழ். மாநகரசபை கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் விசேஷ கூட்டம் வருகிற புதன்கிழமை மாலை சபை மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'நாவலரின் நூல்களை பிற மொழிகளில் பெயர்க்கவேண்டும்'

வெள்ளவத்தை, புதன் ''சத்தியத்தை நிலைநாட்டி கடவுள் நெறியை நம்பி சிறந்த ஒழுக்கசீலராக வாழ்ந்த நாவலர், இலகு தமிழிலே சமய நூல்களை ஆக்கித்தந்தார். இலத்தீன் போன்ற பிறமொழி இலக்கணத்திலும் பார்க்க தமிழ்மொழி இலக்கணம் சிறந்தது எனக்கண்டு இலக்கண உரை நூல்களையும் அவர் அளித்துள்ளார். அவர் பணியில் கேதீஸ்வர ஆலயத் திருப்பணியைச் செய்துமுடிக்க வேண்டும்'' என்று கொழும்பிலுள்ள சமயமன்றங்களினால் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கொண்டாடப்பட்ட நாவலர்விழாவின்போது தலைமை வகித்துப் பேசுகையில் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் நீதியரசர் உயர்திரு பொ ஸ்ரீஸ்கந்தராசா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''வடக்கே இராமகிருஷ்ணரும் தெற்கே நாவலரும் தோன்றியிராவிடில் இன்றைய நிலையில் இந்துக்கள், இருந்திருக்கமாட்டார்கள்'' என்றும் குறிப்பிட்டார்.

சங்கீத பூஷணம் திரு. மு. சீலநாதனின் இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமானது.

'சைவம் காத்த நாவலர்' என்பதுபற்றி திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை பேசுகையில், ''தோற்றம் காணுகையில் சைவமும் தமிழும் தொன்மைவாய்ந்தது. சோர்ந்துபோன மக்களுக்கு உணர்ச்சியூட்டிய நால்வரின் வழியிலே வந்து பணி செய்தவர் நாவலர். எடுத்துக்கொண்ட பணியை நிறைவேற்றும் சிறந்த மன உறுதியை அவர் பெற்றிருந்தார்'' என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. வை. முத்துக்குமாரசாமி நாவலரைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதிய நூல் அரங்கேற்றம் செய்துவைக்கப்பட்டபொழுது திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை பேசுகையில், தமிழ் நூல்களைத் தமிழரே சுவைத்துக்கொண்டிருக்கின்றூர்கள், பிறமொழியாளரும் சுவைக்கும் வகையில் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில்மட்டுமன்றிச் சிங்களத்திலும் மொழிபெயர்க்கவேண்டும். வெளியிடப்படும் இந்நூலுக்குச் சமயபாடப் புத்தகமாக வைக்கும் தகுதி இருக்கின்றது. பூரணமாக நாவலரை தெரிவிப்பதே இந்நூலின் மகத்துவமாகும்'' எனக் குறிப்பிட்டார்.

திரு. மு. வைரவப்பிள்ளை பேசுகையில், நாவலரின் பெயரில் பல் கலைக்கழகம் ஸ்தாபிக்கப்படல்வேண்டும். பெரியபுராண வசனம் ஆங்கிலத்தில்மட்டுமன்றி சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படல்வேண்டும். நமது சைவப் பெரியார்கள் எத்தகைய உயர் வாழ்வை மேற்கொண்டார்கள் என்பதை உலகம் உணர இது வகை செய்யும்'' என்று குறிப்பிட்டார்.

நூலின் முதற் பிரதியை நீதியரசரிடமிருந்து திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் பேசுகையில், ''வள்ளுவரைப் போலவே நாவலரினதும் மூன்றுவகையான உருவப்படங்கள் நிலவிவருகின்றதென்றும் உண்மையான உருவப்படம் எது என்பதைத் தீர்மானித்த பின்னரே நாம் முத்திரை பொறிக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார். நல்லது செய்த நாவலன்'' என்பது பற்றி திரு. க. நவசோதி பேசுகையில், ''ஞானிகளினதும் யோகிகளினதும் உடமையாக இருந்த சமயத்தை சாதாரண மக்களின் வாழ்க்கையோடு இணைத்த பெருமை நாவலருக்குரியது. சமயத்தையும் மொழியையும் வளர்க்க அவர் அரசியல்வாதிகளை நம்பியிருக்கவில்லை. நாவலரை யாழ்ப்பாணத்திற்குமட்டும் உரிமையாக்கி விழா [illegible]டுப் பதிலே மட்டும் நிற்பது நாவலருக்கே நாம் செய்யும் துரோகமாகிவிடும். மலையகத் தமிழ் மக்களினதும் சிலாபம் போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்களினதும் தமிழ் அறிவையும், சமய அறிவையும் வளர்த்து அவர்தம் வாழ்வையும் செம்மையாக்குவதே சைவத்தையும் தமிழையும் நால்வர் வழிப்படி பேணிய நாவலருக்கு நாம் செய்யும் பெருந்தொண்டாகும்'' என்று குறிப்பிட்டார்

நாவலரும் நாவும் என்பதுபற்றி ஆசிரியர் க. கந்தசாமியும் நாவலர் வளர்த்த தமிழ்பற்றி திரு. வே. சுப்பிரமணியமும் சுத்தானந்தரின் நாவலர் நாடகம் என்பதுபற்றி திரு. நா முத்தையாவும் சொற்பொழிவாற்றினுர்கள்.

இறுதியில் நல்லூர் முத்தமிழ் மணி சி. எஸ். எஸ். மணிபாகவதரின் 'நாவலர் பெருமான்' என்னும் கதாப் பிரசங்கமும்இடம்பெற்றது.

# திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

யாழ்ப்பாணம், வெள்ளி ஈழத்து சிவனடியார்திருக்கூட்ட ஆதரவில் திருக்கேதீச்சரத்தில் திருவாசகவிழா இம்மாதம் 28-ம் திகதியிலிருந்து அடுத்தவருடம் ஜனவரி 6-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், திருவாளர்கள் ச. தனஞ்சயராசசிங்கம், வடிவேல்சுவாமி, சி. கணபதிப்பிள்ளை, த. குமாரசுவாமிப்பிள்ளை, ச. இ. சதாசிவம்பிள்ளை, ரா. முத்தையா, மு. வயிரவப்பிள்ளை ஆ. திருநாவுக்கரசு, த. நடராசலிங்கம், முதலியார் செ. சின்னத்தம்பி, வை. நல்லையா ஆகியோர் மேற்படி விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவர்.

# தமிழரசுக் கிளை நிர்வாகிகள்

துணுக்காய், வியாழன் கிளிநொச்சி யோகபுரம் முதலாம் பகுதியில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளையொன்றை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இக் கிளையின் தலைவராக துணுக்காய் கிராமசபை அங்கத்தவர் திரு. ஆ. சபாரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக திரு. கு. சிவஞானமும், தஞ்திகாரியாக திரு. மு. சிவகுருவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 8 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# மேலதிக கமிஷனர்கள் நியமிக்க சிபார்சு

பம்பலப்பிட்டி, வியா. ஸ்தல ஸ்தாபன சேவையிலுள்ள சம்பள முரண்பாடுகள் பற்றி விசாரணை நடாத்திய ஹேமன் பீரிஸ் கமிட்டி மேலதிக முனிசிப்பல் கமிஷனர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# சீனுவிடமிருந்து அரிசி

கொழும்பு, வியாழன் அடுத்த வருடத்தில் இலங்கைக்கு சீனுவிடமிருந்து 200,000 தொன் அரிசி கிடைக்கும். ஏப்ரல், மே, ஜூன், ஆகஸ்ட் மாதத்தில் 10,000 தொன் அரிசியும், மற்றும் மாதங்களில் [illegible] அரிசியும் கிடைக்கும்.

# கள்ளக்கடத்தல்: ஐவர் கைது

மாவிட்டபுரம். வியா. கீரிமலை கிருஷ்ணன்கோயிலுக்கு அருகாமையில் கள்ளக்கடத்தல் நடைபெறுவதாகத் கிடைத்த தகவலைத் தொடர்ந்து காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றப் பிரிவைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் திரு. ஜோகரன் தலைமையில் சன்றபொலிஸ் கோஷ்டி கடற்கரைக்குக் அண்மையில் ஒரு வாக்சோல் காரைக் கைப்பற்றியதுடன் காருக்குள்ளும் வெளியிலும் நின்ற ஐவரையும் கைதுசெய்தது. இதில் ஒருவரிடம் கைத்துப்பாக்கி (பிஸ்ரல்) இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள .

கைதுசெய்யப்பட்டவர்களான குரும்பசிட்டியைச் சேர்ந்த முத்தையா சுந்தரராசா, கந்தையா தங்கவடிவேல், சீனிவாசகம் இராசா, முருகன் சுவாமிநாதன் (பிஸ்ரல் வைத்திருந்தவர்) வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைரமுத்து சுந்தரமூர்த்தி ஆகிய ஐவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கபட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்ட காரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்கிறுர்கள்.

# வெளிநடப்பு?

பம்பலப்பிட்டி, வியா. கொழும்பிலுள்ள தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்யும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் கிறிஸ்மஸ் தினத்தை தமக்கு விடுமுறை தினமாக்காததை ஆட்சேபித்து அன்றைய தினம் வெளிநடப்புச் செய்யத்தீர்மானித்துள்ளனர்.

# மின்சார நிலைய அபிவிருத்தி

கொழும்பு, வியா. காங்கேசன்துறைசிமெந்து தொழிற்சாலைக்கு மின்சாம் வழங்கும் சுன்னுகம் மின்சார நிலையத்தின் அபிவிருத்திக்காக, மின்சார இலாகா, 2,500,000 ரூபா செலவில், வேலைத் திட்டங்கள் ஆரம்பித்துள்ளது.


இவ்வேலைத் திட்டத்தை செயல் படுத்த அரசாங்கம் மூன்று ஜெர்மன் என்ஜினீயர்களின் சேவையை நாடியுள்ளது.


REGAL—JAFFNA
NOW SHOWING
John F. Kenneby
Years of Lightning
Day of Drums
Also; Clay-Patterson
Boxing Fight News

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30 6-30, 9-45 சனி-ஞாயிறு 10-30
S பாலச்சந்தர் - விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை


நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப் பின் பாசம்
கிறிஸ்மஸ் தினத்தன்று
4 காட்சிகள் காண்பிக்கப்படும்.

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத
திருப்பணி நிதி


நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.
தனுதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.

9-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) விஜயா (அம்பாறை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த


விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### இறை மதிப்பு வரி அறிவித்தல்

இறை மதிப்புவரி செலுத்தவேண்டியவர்கள் தயவு செய்து பணத்தை 31-12-65 க்கு முன்னர் செலுத்தவும். அப்படிச் செலுத்தத் தவறியவர்களின் வீட்டிலோ அல்லது வளவிலோ உள்ள அசைவுள்ள அல்லது அசைவற்ற பொருட்களைக் கைப்பற்றி கிராமசபையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என மிக மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு,
கா. க. விசுவலிங்கம்,
தலைவர்,
கிராமசபை,
1514 காரைநகர்.





## கொழும்பு

### வெள்ளி 24 - 12 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 திருவெம்பாவை, 7-10 திருப்பாவை, 7-30 துதிப்பாடல்கள், 7-45 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**334 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 கிறிஸ்மஸ் விசேஷ நிகழ்ச்சிகள்.

## சைவமகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாநில இளைஞர் மாமன்றத்தின் ஆதரவில் வருகிற ஞாயிறு, திங்கள் இரு தினங்களிலும் வண்ணை நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலை மண்டபத்தில் சைவமகாநாடு நடைபெறவிருக்கிறது. இருநாள் விழாக்களிலும் ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திரு. சி. உ. சோமசேகரம் தலைமையில் நடைபெறவிருக்கும் முதல்நாள்விழாவில் வித்துவான் இ. திருநாவுக்கரசு, திருவாளர்கள் நம. சிவப்பிரகாசம், கு. பாலசுந்தரக்குருக்கள், த. குமாரசாமிப்புலவர், மு. வைத்திலிங்கம், ஐ. கைலாயநாதக்குருக்கள் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் சைவசமயம்பற்றி உரைநிகழ்த்துவர்.

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் தலைமையில் நடைபெறவிருக்கும் இரண்டாம்நாள் விழாவில் வித்துவான். நா. கணேசனார், வித்துவான் க. கி. நடராசன், சைவப்புலவர் க. வேந்தனார் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.




## சாம்பியன் போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கட்டுவன் ஞானோதய விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பொன்னம்பலம் வெள்ளிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாம் பிரிவில் தொகுதி 'ஏ' யில் சிறுவிளான் ஞானோதய டைமன் கோஷ்டியும் தொகுதி 'பி' யில் குப்பிளான் சனசமூக நிலைய விக்னேஸ்வராக் கோஷ்டியும் தொகுதிச் சாம்பியன்களாகின. இரண்டாம் பிரிவில் தொகுதி 'ஏ' யில் பண்டத்தரிப்பு வை எம். ஸி. ஏ.யும் தொகுதி 'பி' யில் தெல்லிப்பளை ஸ்ராசும் தொகுதிச் சாம்பியன்களாகின. இவ்விரு இறுதிச் சாம்பியன் போட்டிகளும் வருகிற ஞாயிற்றுக்கிழமை கட்டுவன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்

__உதைபந்தாட்டம்__

## வெற்றி தோல்வி இல்லை

வவனியா, வியாழன்

வவனியா நகரசபை மைதானத்தில் சென்றசனிக்கிழமை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் யாழ்ப்பாணம் புனிதவளன் உதைபந்தாட்ட கோஷ்டியும் வவனியா கிருஷிக பாடசாலை கோஷ்டியும் மோதிக்கொண்டன.

இரு கோஷ்டிகளும் விட்டுக்கொடுக்காமல் விளையாடி ஆளுக்கு ஒவ்வோர் கோல் போட்டனர். இருபக்க கோல்காப்பு வீரர்களது திறமையான விளையாட்டுக் காரணமாக இரு கோஷ்டிகளின் முன்னணி வீரர்கள் கோல் போடுவதற்கான முயற்சிகள் கைகூடாமல் போய்விட்டது.

கிருஷிக பாடசாலை கோஷ்டியில் வீரர்கள் பஞ்சலிங்கம், மகேந்திரசிங்கம் இருவரும் பாராட்டக்கூடிய முறையில் விளையாடினர். எ.பத்தினாதர், எ. பெனடிக் இருவரும் புனிதவளன் கோஷ்டி பக்கத்தில் திறமையாக விளையாடினர்.

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையப்பெற்ற மேற்படி உதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. வி. தங்கராசா மத்தியஸ்த்தராகக் கடமையாற்றினர்.

__அரசாங்க உத்தியோகத்தர்__

## பொழுதுபோக்குச்சங்க உத்தியோகத்தர்கள்

வவனியா, வியாழன்

வவனியா அரசாங்கஉத்தியோகத்தர்களின் பொழுதுபோக்குச் சங்கத்தின் வருடாந்த விழாவும், வருடாந்தப் பொதுக் கூட்டமும் வவனியாபொழுதுபோக்குச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொழுது பின் வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பி.பி. தசநாயகா (வவனியா அரசாங்க அதிபர்) உபதலைவர்கள்: திருவாளர்கள் யேக்ககப் எஸ்சிகுயிற்றி (என்ஜினியர்) ஓ. எம்.பி. சேனநாயகா (மாவட்ட நீதிபதி), வேலாயுதபிள்ளை (மாவட்ட நீர்ப்பாசன இலாகா அதிபர்), சி. பாலசிங்கம் (வைத்திய அதிகாரி), சிறில் சேனநாயகா (காட்டுக்கந்தோர் அதிகாரி) காரியதரிசி: திரு. எல். பி. தம்பிராசா (தொழில்பகுதி அதிபர்) உபகாரியதரிசி: திரு.ஈ. லூயஸ் தனாதிகாரி: திரு. யு. பி. விஜயக்கோன் (காரியாதிகாரி) விளையாட்டுக்காரியதரிசி: திரு.ஏ. இரத்தினசிங்கம் நிர்வாக காரியதரிசி: திரு. வி. விஜயரத்தினம் சமூகசேவை காரியதரிசி: திரு. வி. சுப்பிரமணியம், டென்னிஸ் பகுதி: திரு. வி. நவரத்தினம், விலியற் கப்ரிடின் திரு. எல். துரைசிங்கம் வீட்டுவிளையாட்டுபகுதி: திரு. சமறக்கோன்பண்டா கிரிக்கெட்கப்டின்: திரு. எம்.பி. தம்பிராசா.

## சூறுவளியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது

யாழ்ப்பாணம். வெள்ளி

''இயற்கை அன்னையின் கோரச்செயல் உங்களுக்கு வாழ்வளித்த தெய்வங்களை உங்களிடமிருந்து பிரித்துவிட்டது. அதற்காக எனது நாடும் உங்களுடன் சேர்ந்து கண்ணீர்வடிக்கிறது. ஆனாலும் சூறுவளிக்குப் பலியான அந்தத் தியாகத் திருவுருவங்களின் மனதில் பொதிந்துகிடந்த, நிறைவேறாத எண்ணங்களை, லட்சியங்களை, கனவுகளை நீங்கள் நிறைவேற்றிவைப்பதுதான் அவர்களுக்குச் செய்யும் காணிக்கையாகும். அப்பொழுதுதான் உங்கள் எதிர்காலம் ஒளிமயமானதாக மிளிரும்.''

கடந்த வருடம் இடம்பெற்ற சூறுவளியில் உயிரிழந்தோர் நினைவுதினத்தில் பிரதமவிருந்தினராககலந்துகொண்டு உரைநிகழ்த்திய அமெரிக்க ஸ்தானிகரின் பிரதிநிதி திரு. லூயிஸ் ஏ. குன்சிக் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமாகாண கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்படி நினைவுதினத்தை முன்தினம் மாலை யாழ். நகரமண்டபத்தில் கொண்டாடியது. திரு. எஸ். ஸ்ரனிஸ்லஸ்தலைமைவகித்தார். சூறுவளியின்போது கணவர்களையும் உறவினர்களையும் இழந்த நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் இவ்விழாவுக்குச் சமுகமளித்திருந்தனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா பேசுகையில் கூறியதாவது: ''கடந்த சூறுவளியின்போது 2,000க்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டது் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தமது கணவர்களையும், உறவினர்களையும் இழந்து, சோகக் கண்ணீர் வடித்ததும் மறக்கமுடியாத சம்பவங்கள். நடந்ததை மறந்து எதிர்காலத்தை நல்லமுறையில் வளமாக்க முயல்வது தான் சிறப்பாகும்.''

யாழ். மேயர் திரு. எஸ். சி. மகாதேவா, வண. எஸ். குலேந்திரன் ஆகியோரும் பேசினர்.

திருமதி சகுந்தலா அருமைநாயகம், திருமதி மோகனம்பிகை கணேசன் ஆகியோ[illegible] களும் இடம்பெற்றன.

## எதிரி விடுதலை

மாவிட்டபுரம், வியா.

பொன்னாலைகொலைவழக்கு விசாரணையின் பின் மல்லாகம் நீதிபதியினால் சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த எதிரி, அட்டோர்னி ஜெனரலிடம் இருந்துகிடைத்த ஓர் உத்தரவைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளது.

பொன்னாலையைச் சேர்ந்த ஆழ்வான் நாகன் என்பவர் அதேஊரைச்சேர்ந்தஇராமு சின்னத்தம்பி என்பவரை சென்ற ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி அடித்துக் கொலைசெய்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்பின் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபானுவால் வழக்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தப்பட்டு எதிரி ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் இவ்வழக்குப் பிரதியை பார்வையிட்ட அட்டோர்ணி ஜெனரல் எதிரியை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து ஆழ்வான் நாகன் நேற்று மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி எதிரியைவிடுதலை செய்திருப்பதாக அறிவித்தார். எதிரிதரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## நோயாளிக்கு காட்டிய மரியாதை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கிழக்கு பஸ்டிப்போவைச் சேர்ந்த பஸ்சாரதி திரு. கதிரவேலு என்பவர் முகத்தில் எரிகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சென்றபொழுது வெளிநோயாளர் பகுதியிலிருந்த டாக்டர் அவரைப் பத்தாம் வார்ட்டுக்குப் போகும்படி உத்தரவிட்டும் அவர் மாலை 5-15 தொடக்கம் இரவு 8-10 வரை கவனிக்கப்படாது வார்ட்டில் நின்றுகொண்டிருந்த சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

இதுபற்றித் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: குறிப்பிட்ட நோயாளி வார்ட்டிற்குச் சென்று வெகுநேரம் சென்ற பின்னரும் கவனிக்கப்படாததால், இருப்பதற்கு ஒரு ஆசனம் இருக்கத் தரும்படி அங்கே நின்ற பணியாளரைக் கேட்டபொழுது அவர் நோயாளியை அடிக்கப் பயமுறுத்தியதாகவும், வாயை மூடிக்கொண்டிருக்கும் படியும் கூறினாராம். இதுபற்றி ஆஸ்பத்திரி பொலிஸ்நிலையத்தில் நோயாளி முறையிட்டுவிட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறாது வேறிடத்துக்குச்சென்று சிகிச்சை பெற்றுள்ளாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சௌக்கியப் பகுதி அதிபரை ஒரு விசாரணை நடத்துமாறு திரு. கதிரவேலு கேட்டுள்ளாரெனவும் தெரியவருகிறது.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

(Exide Batteries) எக்சைட் பற்றறிகள் எங்களிடம் சுலபமான தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1422

"குமாரன் தினக்குறிப்பு 1966"

இந்துமத விரத, உற்சவ, குருபூசை தினங்கள், கிறிஸ்தவ பண்டிகைகள், முஸ்லிம் தினங்கள் முதலியன அன்றன்று அறியக்கூடியதாகவும், அரசாங்க தகவல்கள், தபால், தந்தி கட்டண விபரங்கள் மற்றும் சிறந்த அம்சங்கள், சென்ற ஆண்டிலும் கூடுதலாக அமையப்பெற்று கைக்கு அடக்கமான அளவில் விரைவில் வெளிவருகின்றது. விலை ரூபா 1-50. தேவைக்கு முந்துங்கள்: சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 1628

### மனக்கணிதங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து மனக்கணிதங்கள் 2 முதல் ஜே. எஸ். ஸி. வரைக்கும் வெளிவந்துள்ளன. கணிதம் சுலபமாய்ப் பயில அத்திபாரமான கணித அறிவு விருத்தியுற இவை ஏற்றவை. விலைப்பட்டியலுக்கெழுதுக. கலாபவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1618

### முதலீடு

வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் உங்கள் பணத்தை முதலீடுசெய்ய விரும்புகிறீர்களா? அப்படியானால் எம்மிடம் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1627, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1627

### நன்றி நவிலல்

7-12-65-ல் சிவபதமடைந்த எமது தந்தையார் கா. சி. மஹேச சர்மா அவர்களின் ஈமக்கிரியையின் போதும், தசாகம் முதலிய கிரியைகளின் போதும் நேரிலும், தந்தி, தபால் மூலமாகவும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்ட அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி. கா. ம. யோகீசுவரன், கா. ம. தேவேசுவரன், கா. ம. முரளீதரன், 'புலவர் இல்லம்', காரைநகர். 1633


## தீர்மானத்திற்கு ஆதரவு

கொழும்பு, வியாழன்

ரொடீஷியா நிலைமை பற்றிவிவாதிப்பதற்குகாமன்வெல்த் நாட்டு பிரதமர்களின் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்ற நைஜீரிய அரசாங்கத்தின் தீர்மானத்தை இலங்கை ஆதரித்துள்ளது.

நைஜீரிய அரசாங்கத்தின் தீர்மானத்தை ஆதரிப்பதாக இலங்கை அரசாங்கத்தின் முடிவு நைஜீரிய பிரதமமந்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### மின்சார சேவை

உங்கள் வீட்டிற்கு மின்சார சேவை (Electrical wiring and installation) வேண்டியிருக்கிறதா?

அப்படியானால் அதற்கு வேண்டிய பொருட்களையும் சேவையையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

நகீ இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிடெட்
20, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி (விசேஷ) மசோதா

# புதிய சட்ட விதிகளை மந்திரிசபை ஏற்றது

## ஜனவரியில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்

வெள்ளவத்தை, புதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியில் நிர்வாகம் நடத்த வகைசெய்யக் கூடியதான புதிய சட்ட விதிகளை தமிழ்மொழி உபயோக (விசேஷ) மசோதாவில் சேர்த்துக்கொள்வதற்கு மந்திரிசபை இன்று அங்கீகாரம் அளித்தது இப் புதிய சட்டவிதிகள் ய வும் ஜனவரியில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த நாட்டின் அரசாங்க மொழியாக சிங்களம் இருக்கும். அதேசமயம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாக காரணங்களுக்காகவே .இந்தப் புதிய சட்ட விதிகள் இயற்றப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப் படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடக்க வகைசெய்யும் ஷரத்து இம் மாகாணங்களில் சகல அரசகருமங்களுக்கும் தமிழை உபயோகப்படுத்த வகைசெய்யும். சகல தஸ்தாவேஜுகளையும் தமிழில் கட்டாயம் பதியவும், வைக்கவும், இதுவகைசெய்யும் எனவும் அறியப்படுகிறது. இம்மாகாணங்களில் உள்ள இலாகாக்கள் உள்ளூராட்சிமன்றங்கள் ஒன்றுக்கொன்று தமிழிலேயே தொடர்புகொள்ளவும் இதுவகைசெய்யும்எனக் கூறப்படுகிறது.

ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ளவும், தங்கள் தாய்மொழியிலேயே கல்விகற்கவும் புதிய சட்டவிதிகள் வழிவகுக்கும் என நம்பப்படுகிறது. சகல அரசாங்க பிரசுரங்களும், பாரங்களும், அறிவித்தல்களும் சட்டங்களும் அகிலஇலங்கையிலும் வெளியிடவும் இப் புதிய ஷரத்துக்கள் வகைசெய்யுமெனக் கூறப் படுகிறது.

## சிறிமாவுக்கு வேண்டுகோள்

வெள்ளவத்தை, புதன்

லங்கா சமசமாஜக் கட்சியின் 30-வது ஆண்டு மகாநாடு விரைவில் நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளவேண்டாமென திரு. பீலிக்ஸ் டயஸ், திரு. ஆர். ஜி. சேனநாயக்கா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் பலர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது. சுதந்திரக் கட்சியின் நடுநிலைமைக் கொள்கையிலிருந்து அதிதீவிரஇடதுசாரிப்பக்கத்துடன் சேர்ந்துகொண்டால் மக்கள் மத்தியில் சுதந்திரக் கட்சியின் செல்வாக்குக் குறைந்துவிடுமெனஇவர்கள் கருதுகின்றனராம்.

## சோவியத் கலாசாரகுழுவினருக்கு வரவேற்பு

வவனியா, வியாழன்

இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின்பேரில் இலங்கை வந்துள்ள சோவியத் கலாசாரக்குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் தமது வடபகுதிச் சுற்றுப் பிரயாணத்தின் போது வவனியா வந்த போது அவர்களுக்கு வவனியா நகரசபை மண்டபத்தில் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் வவனியாக்கிளை ஒரு வரவேற்பளித்தது. இவ்வைபவத்துக்கு வவனியா வைத்திய அதிகாரி டாக்டர் கே. பாலசிங்கம் தலைமைதாங்கினார்.

மேற்படி கிளைச் சங்கத் தலைவர் ஜனாப் எஸ். எம. யூசுப் வரவேற்புரை நிகழ்த்தி விருந்தினரை உபசரித்து அவர்களை மண்டபத்தில் கூடியிருந்த மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்

சோவியத் குழுத் தலைவி திருமதி அனஸ்ராலி கொலினு ரஷ்ய மொழியில் பேசுகையில்: ''சோவியத் மக்களுக்கும் இலங்கை மக்களுக்குமிடையில் நட்புறவு வலுவடைந்து வருவதாகவும், காலாசார நட்புறவுச் சங்கங்கள் கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ள நல்ல வழிவகுக்கின்றன என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி கிளைச் சங்க அங்கத்தவர்களினால் யோகாப்பியாசங்கள் செய்துகாண்பிக்கப்பட்டன.

கோஷ்டியின் தலைவி தமது சங்கத்தின் அன்பளிப்பாக தங்கப்பதக்கம் ஒன்றை டாக்டர் கே. பாலசிங்கத்துக்கு அணிவித்துக் கௌரவித்தார்.

## இராணுவம்ஆட்சியை கைப்பற்றியது !

### டாகோமே குடியரசில் கட்சிகளுக்குத் தடை

லண்டன், டிச. 22

மேற்கு ஆபிரிக்காவின் டாகோமே குடியரசில் அரசாங்கத்தை ராணுவம் கைப்பற்றியுள்ளது. இராணுவத் தலைவர் ஜெனரல் பால்கோ ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.

பார்லிமெண்ட் கலைக்கப்பட்டதுடன், சகல கட்சிகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டம் செல்லுபடியாகாது எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களும் மந்திரிமாரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் அமைதியின்மை நிலவியதால் இராணுவம் தற்காலிகமாக ஆட்சியைக் கைப்பற்றியதாக இராணுவத் தலைவர் ஜெனரல் பால்கோ தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அரசாங்கத்தை ராஜினமாச் செய்யுமாறு இராணுவம் ஒரு மாதத்துக்கு முன்னர் வற்புறுத்தியதாகவும் ஆனல் அரசாங்கம் அவ்விதம் செய்யமறுத்துவிட்டதாகவும் இதைத் தொடர்ந்து இப்பொழுது இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியிருப்பதாகவும் மற்றும் செய்திகள் கூறுகின்றன.

## பல்கலைக்கழக காடைத்தனம்

### மந்திரியின் கவலை

வெள்ளவத்தை, புதன்

பல்கலைக்கழகத்தில் காடைத்தனத்தை அகற்றுவது குறித்து தான் சக மந்திரிகளுடன் இன்றைய மந்திரிசபைக் கூட்டத்தில் கலந்தாலோசித்ததாக கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை தெரிவித்தார்.

நேற்று, வித்தியோதய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் போது நடைபெற்ற அசம்பாவிதம் குறித்தும் கல்விமந்திரி வருத்தம் தெரிவித்தார். ''பல லட்சம் ரூபாவை காடைத்தனத்துக்காக செலவழிக்க வேண்டியுள்ளது பற்றி எனக்கு பெரும் கவலையாய் உள்ளது. வரியிறுப்பாளரின் பணத்தை இவ்விதம் அனுவசியமாக செல்வழித்திருப்பது பெரும் கவலைக்குரிய விஷயம். மாணவர்கள் கல்வி பெற்று ஒழுக்கமுள்ளளர்களாக வளர வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகத்தை நடத்தி தொகை தொகையாக பணத்தைசெலவிடுகிறோமே தவிர காடைத்தனத்துக்காக அல்ல என்பதை மாணவர்கள் உணரவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வங்கி ஊழியருக்கு வைத்திய சலுகை

பம்பலப்பிட்டி, புதன்

மக்கள்வங்கி ஊழியர்கள் அனுபவிப்பதுபோன்ற வைத்தியஉதவி அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து இலங்கை வங்கி ஊழியருக்கும் கிடைக்கவிருக்கிறது.

தற்பொழுது இலங்கை வங்கி ஊழியருக்கு இருந்து வரும் சலுகையின்படிஊழியருக்கு மட்டும் வருடமொன்றுக்கு அவரது அடிப்படைச் சம்பளத்துக்கு சமமான அளவு தொகைக்கு வைத்தியஉதவி கிடைத்துவருகிறது. இதற்கு ஊழியர் எவ்வித பணமும் செலுத்த தேவையில்லை. ஆனல் புதிதாக அமுலுக்குவரவிருக்கும் திட்டத்தின்படி ஊழியருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் வருடமொன்றுக்கு 3750 ரூபா தொடக்கம் 6000 ரூபா வரைக்கும் வைத்தியஉதவி பெறலாம். ஊழியர் இந்த வைத்திய உதவிக்காக மாதந்தோறும் தமது சம்பளத்தில் ஒரு குறிப்பிட் விகிதத்தை செலுத்தவேண்டும்.

## பாதை சேதம்: மக்கள் கஷ்டம்

வவனியா, வியாழன்

நாய் ஆற்றுப் பாதை கடந்த பெருமழை காரணமாக பெரும் சேதத்துக்குள்ளானதால அப்பாதைக்கு மேல்பகுதியிலுள்ள மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது கஷ்டமடைகின்றனரெனவும், அவ்விடத்திலுள்ள மக்களுக்குப் பெரிய ஆஸ்பத்திரியாகவுள்ள சுமார் 400 யார் தொலைவிலுள்ள முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கர்ப்பிணிகள் செல்வது மிகவும் கஷ்டமான காரியமாக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

அண்மையில் வவனியாவுக்கு விஜயம் செய்த ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் இவ்விடத்தை நேரடியாகப் பார்வையிட்டு இப்பாதையைச் சீர்படுத்துவதற்குத் தாம் விரைவான நடவடிக்கை எடுப்பதாக உறுதி தெரிவித்தார்.

## குடும்பநலத்திட்ட பயிற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுவீடன்-இலங்கை குடும்ப நலத்திட்டம் தமிழ்பேசும் மக்களுக்கு பருத்தித்துறையிலும் சிங்களம் பேசும் மக்களுக்கு பண்டாரகமத்திலும் இயங்கிவருகிறது. பொதுச் சௌக்கிய பரிசோதகர்களும், மருத்துவத் தாதிமார்களும் குடும்ப நலத்திட்ட அபிவிருத்திக்காகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள். பருத்தித்துறையில் சென்றவாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எஸ். இராசசிங்கம், எஸ். பத்மநாபன். கே. சீனிவாசகம், எஸ், விசுவலிங்கம், ரி. ஆலாலசுந்தரம், து. மகாதேவன், பொ. ஜகந்நாதன் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## 30,000 யார் பப்ளின் துணிவகை பறிமுதல்

வெள்ளவத்தை, புதன்

புறக்கோட்டை கெய்சர் வீதியிலுள்ள தனியார் ஸ்தாபனமொன்றிலிருந்து 30,000 யார் பப்ளின் துணியை வர்த்தக இலாகாவினர் பறிமுதல் செய்தனர். இந்த பப்ளின் துணி அடுத்த வாரம் கூ. மொ. வி. நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும்.

பப்ளின் துணிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் குறிப்பிட்ட வர்த்தக ஸ்தாபனத்தில் மேலதிக பப்ளின் துணியிலிருந்ததாலேயே அவை பறிமுதல் செய்யப்பட்டதாக இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஐ. நா. மகாசபை முடிவுற்றது

லண்டன், டிச. 22

ஐ. நா. வின் 20—வது மகாசபைக் கூட்டம் இன்று முடிவடைந்தது. மொத்தம் 108 விஷயங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அடுத்த நிதிஆண்டுக்கு 1210 லட்சம் டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தேவை

சுன்னுகம் மகாஹாட்வேஸ்ரோருக்கு மனேச்சர் ஒருவர் உடனடியாகத் தேவை. புக்கீப்பிங், சுருக்கெழுத்து ஹாட்வே வியாபார அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளம் 125 ரூபா மட்டும். தெரிவு செய்யப்படுபவர் 2000 ரூபா ரொக்கப்பிணை கட்டுவதுடன் உடனே வேலை ஏற்கவும் தயாராக இருக்க வேண்டும். 1-1-66 க்கு முன்னர் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். 1629

## ரூ. 34 கோடி அந்நிய செலாவணி அனுமதி

பம்பலப்பிட்டி, வியா.

அடுத்த வருடத்துக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக முதலில் ரூ.34 கோடி 10லட்சம் வரை அந்நிய செலாவணி அனுமதியளிக்கப்படவிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org